// மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை - 600 006

ந.க. எண். 27629 / அ4 / இ1 / 2020, நாள். .09.2020.

*****

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு – 2018-2019 மற்றும் 2019–2020 – தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இணையதள வாயிலாக கலந்தாய்வு நடத்தி நியமன ஆணை வழங்குதல் சார்ந்து அறிவுரைகள் - குறித்து.

பார்வை: 1. சென்னை–3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண். 2563/PSD–I2/2020, நாள். 21.07.2020.

2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 27629/அ4/இ1/2020, நாள். 14 .09.2020.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 633 இளநிலை உதவியாளர் பட்டியல் பார்வை (1)ல் காணும் கடிதத்தின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணிநாடுநர்களுக்குப் பணிநியமன ஆணை வழங்கிட இணையதளம் வாயிலாகக் கலந்தாய்வு 17.09.2020 மற்றும் 18.09.2020 ஆகிய இரு நாட்கள் நடத்தப்பட உள்ளது. இப்பொருள் சார்ந்து உடனடியாக கீழ்க்காணுமாறு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நியமன ஆணை வழங்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளுமாறு நியமன அலுவலரான சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

1. பணியிடம் ஒதுக்கீடு பெற்ற பணிநாடுநரை அழைத்து அவர்களின் அசல் கல்விச் சான்றிதழ்கள். சாதிச்சான்று, மருத்துவ உடற்தகுதிச்சான்று ஆகியவற்றை சரிபார்த்த பின்னரே நியமன ஆணை வழங்க வேண்டும். இத்துடன் மாதிரி நியமன ஆணை இணைக்கப்பட்டுள்ளது. பணிநாடுநருக்கு உடன் நியமன ஆணை வழங்க வேண்டுமென்றும், அதன் நகல் ஒன்றினை இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

அவர்களின் பெயரிட்ட முகவரிக்குத் தவறாது அனுப்பி வைக்க வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



2. இணைக்கப்பட்டுள்ள மாதிரி நியமன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வண்ணம் நியமன ஆணைகள் வழங்கப்பட வேண்டும்.

3. நியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்த உடன் அவரது வேலைவாய்ப்பு பதிவு அட்டையைத் தனியரிடமிருந்து பெற்று, வேலைவாய்ப்பு அலுவலக பதிவேட்டில் இருந்து (Live Register) பெயரை நீக்கம் செய்யும் பொருட்டு சார்ந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலருக்கோ அல்லது சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநருக்கோ சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனுப்பி வைக்க வேண்டும்.

4. வரிசை எண். 567, 569, 572, 575, 576, 642 –இல் உள்ள பணி நாடுநருக்கு (Temporary Conditional Appointment) தற்காலிக நிபந்தனையுடனான நியமன ஆணை வழங்கப்பட வேண்டும். இப்பணி நாடுநரது சாதிச்சான்றின் உண்மைத் தன்மை, சரிபார்த்தலுக்கு உட்பட்டதாகும். எனவே, இவர் சார்பாக அளிக்கப்பட்ட சாதிச் சான்றிதழ் உண்மைத்தன்மை அற்றவையென பின்னர் தெரியவந்தால், இந்நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பெற்று வழங்கப்பட்ட ஊதியமும் பிடித்தம் செய்யப்படும். மேலும், சாதிச்சான்றின் உண்மைத்தன்மை அறியப்பட்ட பின்னரே மேற்காணும் பணிநாடுநருக்கு இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும். இவ்விவரங்கள் நியமன ஆணையில் தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும்.

5. நியமனம் பெற்றுள்ள நபர்கள் பணியில் சேர்ந்த அறிக்கையினைத் தவறாமல் அனுப்புமாறும் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்புமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : மாதிரி நியமன ஆணை – 1

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).
14/9/2020

14/9/2020

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.